# “வல்வை”என்று சொல்கையிலே!.............

“வல்வை” என்று சொல்கையிலே
வசந்தம் வந்து வீசுதடி!...........
சொல்ல இன்பம் “வல்வை”யிலே
எனைக்கொள்ளை கொண்டு போகுதடி!................

**(வல்வை)**

ஆர்ப்பரிக்கும் அலையுமிங்கே ஓர்புறத்துக் காட்சி
ஊர்முழுக்க ஆலயங்கள் உள்ளநல்ல ஆட்சி
போர்அடிக்கும் நெற்பயிற்கு தீருவிலே சாட்சி
போர்த்திருக்கும் பசுமைகட்கு தென்புறத்து குளிர்ச்சி
சீர்கொடுத்த மண்ணிவள்கு நாம்கொடுப்போம் மாட்சி!...........

(வல்வை)

ஆயகலை கற்றுத்தர அன்றெழுந்த “சிதம்பரா” – சைவ
தாயவளின் அணைப்பிணிலே தலைநிமிர்ந்த “சிவகுரு”
பாவையிவள் பயில்வதற்காய் பவனிவரும் “மகளிரும்”
பாலகர்கள் பசிதீர்க்க பல இருக்கும் “கூடமும்” - கல்வி
சேவைசெய்யக் காத்திருக்கும் “வல்வைக்கல்வி”மன்றங்கள்!.........

**(வல்வை)**

சேவை என்றே அன்றெழுந்த விக்கினேஸ்வராவும்
தேவை எனறே பின்எழுந்த ஆதிசக்தியும் - கடல்
பறவகளின் உழைப்பினிலே கணபதி படிப்பகம்
பாகவதன் தந்து சென்ற “தாய்” சேவாநிலையமும்
போதாதென்றே மேலும் எழும் நூல் நிலையங்கள்!.................

**(வல்வை)**

பாய்மரத்தின் உதவியுடன் பலகடல் கடந்த “பூரணி”
தாய்கொடுத்த கரங்களினால் பக்ககடல்கடந்த “சாமியும்”
வாய்தொடுத்த செயல்முடிக்க வந்துதித்த“குமரனும்”–கடல்
பாயெனவே கால்பிணைத்து படுத்திருந்த “யோகனும்”
ஓய்வெடுக்கா அலைகடலில் புரிந்தனரே சாதனை!...........

**(வல்வை)**

ஈரேழு கழகங்கள் உள்ள நல்ல ஊரிலே
ஏடேறும் புகழ்படைப்பார் நாள்தோறும் பாரிலே
கைவீச்சு கால்வீச்சு கலையோடு கம்புவீச்சு
கைப்பந்து கால்ப்பந்து ஓடியாடும் பல்விளையாட்டு
களம் யாவும் இவரோடு மலராகி மணம் வீசும்!............

(வல்வை)

செந்தமிழ் கலாமன்றம் இருந்ததுண்டு“முண்னேடியாய்”
சந்தணம்மணக்கும் “ஹெலியன்ஸ்” நண்பரென்றும்
“கலாலய” சங்கதிஉரைத்த “பாரத்” என்றும் - புகழ்
சங்கமாய் உயர்ந்த“நெடியநகர்” என்றும் - நாடக
சங்கங்கள் மேன்மேலும் வருவதுண்டு!................

(வல்வை)

வேறு

வீரம் விளைந்ததென்று கதைகள் கேட்டிருந்தோம்
வீரம் முழங்குதென்று பலவும் பார்த்திருந்தோம்
பாரம்பரியமாக “இவை” நாம் இரசித்திருந்தோம்
யாரும் எழுதவில்லை நாமேன்?..... பார்த்திருப்போம்
வாரும் எம்முடனே “வரலாற்றை” யாமுரைப்போம்!........

(வல்வை)

கந்தவனம் தொடங்கி சந்நிதி தான் வரைக்கும்
நீண்ட நெடுநகரின் நினைவே எமக்கிருக்கும்
ஆண்டமன்னவரும் எங்களின் சொந்தமென்று
அழியாப்புகழ் தந்த “வல்வை”த்தளமிங்கே
சேர்ந்தே நாமுரைப்போம்“தாய்”சீரைத்தெரிந்திடுவோம்!........

(வல்வை)

எழுதுகோல் எடுத்து தொடுப்போம் போர் இங்கு
எழுதி எழுதிச் சென்றால் “வரலாறு” தானேவரும்
“முழுதாய் எமதன்னை படைத்தாள்” எதற்காக?
முழங்கு “வல்வை” யெனமுகமும் கொடுத்தாளே!
கரங்கள் கொடுத்திடுவீர்! கதைகள் உரைத்திடுவர்!.........

(வல்வை)

# மைதானத்தில் மலர்ந்த "புளுஸ்"

1961 ஆம் ஆண்டு யாழ்/ வல்வை சிதம்பராக்கல்லூரியின் விளையாட்டு மைதானம்

சுந்தரி அண்ணா
பூரணச்சந்திரன் அண்ணா
அரசரெட்ணம் அண்ணா
குட்டிமணி அண்ணா

4x400 யார் அஞ்சலோட்டம்! ஒருவர் பின் ஒருவராக தடியை மாற்றியபடி அஞ்சலோட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தனர். ஆஹா! என்ன ஆவேசம் அதுவரை வல்வெட்டித்துறை நகரம் கண்டிராத ஆவேசத்துடன் மக்களின் சந்தோச ஆரவாரமும் வானை முட்டியது. ஒவ்வொருவருடமும் இடைவிடாது நடந்துவரும் வலவெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனா போட்டியின் உச்ச நிகழ்வாகவும் மக்களின் ஆர்வத்தைத்தூண்டும் விளையாட்டாகவும். காணப்படும். அஞ்சலோட்டத்தில் வல்வையின் பழம்பெரும் விளையாட்டுக் கழகங்களான ரேவடி இளைஞர்விளையாட்டுக்கழகம். சைனஙீஸ் இளைஞர்விளையாட்டுக்கழகம். ஊதயசூரியன் இளைஞர்விளையாட்டுக்கழகம். நெடியகாடு இளைஞர் வியையாட்டுக்கழகம் றெயின்போஸ் இளைஞர்விளையாட்டுக்கழகம் என்பன தத்தமது விளையாட்டு வீரர்களுடன் அடிக்கடி பலப்பரீட்சையில் ஈடுபடும் மைதானமே சிதம்பராக்கல்லூரி விளையாட்டுமைதானமாகும். எனினும் சிதம்பராக்கல்லூரியின் விளையாட்டுப் போட்டியில் அஞ்சலோட்டமே அனைவரையும் கவர்ந்திழுக்கும் அதிஅற்புதமான போட்டியாக காணப்படும். ஐந்து தாய்க்கழகங்களின் வீரர்களும் மக்களின் எதிர்பார்ப்பிற்கும் அதிகமான வேகத்துடன் தடிகளை ஒருவர் பின் ஒருவராக மாற்றி ஓடிமுடித்த போதும் யாருமே வெற்றிக்கிண்ணத்தை தட்டிக் கொண்டதில்லை! தத்தமது உடல் வலுவையும் வேகத்தையும் காட்டினாலும் அஞ்சலோட்டத்தின் வெற்றி எனபது. தனிநபருக்கு உரியதல்ல. அது கூட்டு முயற்சியின் இறுதியில் கிடைக்கும் கோலகலத்தின் உச்சம். ஓட்ட வீரர்கள் வெறுமனே தடியினை மட்டும் மாற்றுவதில்லை. அவர்களின் வேகமே உடலுக்குடல் மாற்றப்பட வேண்டும். விக்கிரமாதித்தனின் கதையில் வரும் கூடுவிட்டு கூடுபாயும் வேதாளம் போல் மைதானத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வீரரிடமிருந்து ஓடஆரம்பிக்கும் வீரருக்கு மாற்றப்படும் வேகமே இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கிறது. இதனால் தான் உலகில் எங்கு நடக்கும் விளையாட்டுப் போட்டிகளின் போதும் ஒலிம்பிக் விளையாட்டு விழா உட்பட அனைத்து நிகழ்சிகளிளுமே மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் இந்நிகழ்வு. இறுதியாக நடைபெறும் போட்டியாக நடைபெறுவதுண்டு.

வல்வட்டித்துறை சிதம்பரா மைதானத்தில் நடைபெறும் அஞ்சலோட்டத்தில் ஐந்து விரல்கள் உள்ளதே ஒருகை. எனும் கேட்பாட்டில். உறுதியாக மைதானத்தில் இறங்கவேண்டிய வல்வையின்வீரர்கள். உதிரிகளாக தனித்தனியாகவே தம்முள் பலப்பரீட்சையில் முட்டிமோதும் போது அயல் கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களுடன் மைதானத்தில் இறங்கும் வீரர்கள் மிக இலகுவாக

வெற்றிக்கிண்ணத்தை தட்டிக்கொண்டு மண்ணின் மைந்தர்களையே மண்கவ்வ வைத்து விடுவாகள். 1950களில் வல்வையிலிருந்து அகில இலங்கை ரீதியான போட்டிகளின் இறுதிச்சுற்றுக்களில் பலமுறை பங்குபற்றியதுடன் அல்லாமல்பல வெற்றிக்கிண்ணங்களையும் வல்வட்டித்துறைக்கு கொண்டு வந்து சேர்த்த வல்வட்டித்துறை டைனமோஸ் விளையாட்டுக்கழகத்தினரின் காலத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட வல்வை இளைஞர் விளையாட்டுக்கழகம் பெயரில் ஒருசில வெற்றிகளைப் பெற்ற போதும். குறிப்பிடத்தக்க சாதனைகள் எதையும் புரியாமலே தனது செல்வாக்கை, இழந்து மறைந்து போனது. இதனால் மீண்டும் ஐந்து கழகங்களும் தனித்தனியாக ஒவ்வொரு போட்டிகளிலும் பங்கு பற்றினர். குறிப்பிட்ட வல்வையின் விளையாட்டு வீரர்கள் சென்ற இடங்களில் தோல்வியுடன் திரும்பியது மட்டுமல்லாமல் வெளியிடங்களில் இருந்து வரும் வீரர்கள் வல்வை மண்ணில் வைத்தே வல்வையின் விளையாட்டுக்கழகங்களை வெற்றி கொண்டு திரும்பிச்சென்றனர். சென்ற இடமெல்லாம்வென்று வந்த மண்ணின் மைந்தர்கள் சொந்தமண்ணிலேயே பரிதாபகரமாக தோல்வியைச் சந்தித்தனர். இந்நிலையிலேயே 1961ம் ஆண்டு சிதம்பராக்கல்லூரியின் மெய்வல்லுனர் போட்டி நடந்தது. தொடர்ந்த தோல்வியினால் துவண்டு போயிருந்த ஊரின் இளைஞர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் வல்வை மண்ணில் இருந்து வெற்றிக் கோப்பையை தூக்கிச் சென்றுவிடாமல் தடுப்பதற்காக ஐந்து தாய்க்கழக வீரர்களும் இணைந்து கொண்டனர். அந்நேரத்தில்தான் வானை முட்டிய மகிழ்ச்சி ஆரவாரத்துடன் 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தின் வெற்றிக்கிண்ணம் எம்மவர்களின் கைகளில் இருந்து தட்டிச் செல்வது தவிர்க்கப்பட்டது. அக்கணம்முதல் ஒற்றுமை உணர்வால் ஏற்பட்ட புதியவலு எங்கள் மண்ணில் பெருவெள்ளமாக பொங்கிப்பிரவாகிக்கத் தொடங்கியது. இவ்வாறு பேராற்றலுடன் எங்கள் மண்ணின் வீரர்கள் களத்தில் நிற்கும் போர்வீரர்களுக்கு உரிய இயல்புடன் வெற்றிக்கம்பத்தை முத்தமிட்ட போது வல்வை மண்ணை பற்றிக் கொண்டது தான் “புளூஸ்” விளையாட்டுக் கழகம்.

1961ம் ஆண்டு சிதம்பராக்கல்லூரியின் மெய்வல்லுனர் போட்டியின் போது போது அந்த அஞ்சலோட்டத்தில் பங்குபற்றிய நால்வருமே வல்வை “புளூஸ்” விளையாட்டுக்கழகம் என்னும் பெயரில் முதன்முதலிலே விளையாட்டு மைதானத்தில் களமாடிய ஆரம்ப வீரர்கள். “புளூஸ்” விளையாட்டுக்கழகத்தின் பிதாமகர்கள் அவர்கள்தான். ஓயாது அலையடிக்கும் அந்த வல்வட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் மைதானத்தில் உருவாகிய “புளூஸ்” விளையாட்டுக்கழகம் அலைகடல் கடந்து இன்று அகில உலகமெல்லாம் வெற்றிவாகை சூடிநிற்க்கின்றது. திரைகடல் ஓடி திரவியம் தேடிய மண்ணின் மைந்தர்களால் உருவாக்கப்பட்ட “புளூஸ்” விளையாட்டுக்கழகம் இன்று உலகின் பல திசைகளிலும் தனக்கெனக் தனியிடம் பிடித்துள்ளது. அதனுடைய சாதனைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் உலக சாதனைகளாக கின்னஸ் புத்தகத்தில் ஆழிக்குமரன் ஆனந்தனால் நான்கு (1963)தசாப்தங்களுக்கு முன்பே பொறிக்கப்பட்டு விட்டன.

நீல நிறம் .... நீல நிறம்......
வானிற்கும் கடலுக்கும்
நீல நிறம் காரணமேன்?.......

என்ற அந்தப் பாடலை எழுதிய சாகாவரம் பெற்ற கவிஞன் கூறிய காரணம்தான் வல்லை "புளுஸ்" விளையாட்டுக்கழகத்தின் கொடியில் இருக்கும் நீல நிறங்களிற்கும் காரணமாகும். தாய்நிலத்தின் மடியிலே தாலாட்டும் அலையோசையில் ரேவடிக்கடக்கரையில் இருந்து"புளுஸ்" விளையாட்டுக்கழகத்தின் கொடியைப் பற்றி சிந்தித்த எமது முன்னையவர்களின் சிந்தையில் உதித்தநிறங்கள்தான். இரண்டு "நீல" நிறங்களும். எட்டாத துூரத்தில் வானும் கடலும் நட்புடன் கைகுலுக்கிய காட்சியை வல்வைக்கடற்கரையில் இருந்து பார்த்தவர்களின் எண்ணத்தில் உருவான கொடி பின்னாட்ளில் நீண்டு நிமிர்ந்த கம்பங்களில் உலகமெல்லாம் வானைத்தெட உயர்ந்தது. எதிர்ப் போட்டியாளரை வா வா என களம் காண அழைத்தது. தன்னை வென்றவனை விருந்தோம்பலுடன் வழியனுப்பி வைத்தது. தன்னிடம் தோற்றவனின் தோளைத்தட்டி துணிவு கொடுத்தது. ஆம் அது தான் வல்வை புளுஸ் விளையாட்டுக்கழகம்.

வல்வெட்டித்துறை பற்றிய முழுமையான வரலாற்று ஆவணச்சேகரிப்பிற்காக உங்களிடமிருந்து செய்திகள் மற்றும் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகொள்ளவும்.

**www.valvai.com**